# அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 1/2014(IV) இற்கு அமைய தமிழ் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்காக IV ஆம் மட்ட உத்தியோகத்தர்களினால் கலந்து கொள்ள வேண்டிய 50 மணித்தியால மொழித்திறன் விருத்தி பாடநெறிக்கான பாடத்திட்டம்

## அரசகரும மொழிகள் திணைக்களம்

**அறிமுகம்**

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 7/2007 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு அரச ஊழியர்களும் அரச சேவையில் இணைந்து அரசகரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழித் தொடர்பாக தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறே அச் சுற்றறிக்கையின் திருத்தமாக வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 1/2014 மற்றும் அதன் திருத்தமாக 2017.05.30 ஆந் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 1/2014(IV) இற்கு அமைய IV ஆம் மட்டத்திற்கான தமிழ் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்களினால் கலந்து கொள்ள வேண்டிய 50 மணித்தியால மொழித்திறன் விருத்தி பாடநெறிக்காக பரிந்துரை செய்யப்பட்ட பாடத்திட்டம் இங்கு உள்ளடக்கப்படுகிறது.

இரண்டாம் மொழியாக தமிழ் மொழியைக் கற்கும் போது கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டிய அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இரண்டாம் மொழி கற்றல், கற்பித்தல் முறைகள், பாடத்திட்ட ஒழுங்கமைப்பு மற்றும் அதன் காலம் குறித்து பாடதிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்காக இரண்டாம் மொழியைக் கற்றல் தொடர்பாக சிறந்த பயிற்சியைப் பெற்ற போதானாசிரியர் ஒருவரின் வழிகாட்டல் பயிலுனர்களுக்கு அவசியமாகும்.

உத்தேசிக்கப்பட்ட நோக்கங்கள்

1. நாளாந்தம் எளிய உரையாடல்களில் ஈடுபடுவதற்காக செவிமடுத்தல் மற்றும் பேச்சுத் திறனை விருத்தி செய்தல்.
2. நபர்கள் மற்றும் இடங்களின் பெயர்களை வாசித்தலுக்காக வாசிப்புத் திறனை விருத்தி செய்தல்.
3. சிறு கடிதங்களை எழுதுவதற்காக எழுதும் ஆற்றலை விருத்தி செய்தல்.

போதனையாளருக்கான கொடுப்பனவு

- 50 மணித்தியால பாடநெறிக்காக 01 மணித்தியாலத்திற்கு 400/=

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | கற்றல்பேறு | கற்றல் கற்பித்தல் முறை | காலம் (மணி) | பேச்சு | எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1.1<br>இருமொழிக்கும் பொதுவான சொற்களைக் கூறுவர்.<br><br>1.2<br>சுய அறிமுகம் செய்வர். | • எவ்வித மாற்றமும் இன்றி இருமொழிக்கும் பொதுவான சொற்கள்<br>உதாரணம் -<br>அம்மா<br>சீனி<br>• சில மாற்றங்களுடன் காணப்படும் இருமொழிக்கும் பொதுவான சொற்கள்.<br>உதாரணம் -<br>மேசய<br>குடய<br><br>• பேர்<br>• ஊர்<br>என்ரை பேர்<br>என்ரை ஊர் | • எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்படும் இருமொழிக்கும் பொதுவான சொற்களைக் கூறுவர்.<br>• ஒரு சில மாற்றங்களுடன் காணப்படும் இருமொழிக்கும் பொதுவான சொற்களைக் கூறுவர்.<br><br>• தனது பெயரையும் தனது ஊரையும் தமிழில் கூறுவர். | செய்து காட்டல் பின்பற்றல் | 02 | 02 | - |
| 02.<br><br>02.<br>தொடர்ச்சி … | 2.1<br>நண்பரையும் வீட்டில் உள்ளவர்களையும் அறிமுகப்படுத்துவர் | • இவர் என்ரை நண்பர்/ சிநேகிதர்<br>• இவரின்ரை பேர்<br>• இவரின்ரை ஊர்<br>• அவர் என்ரை அப்பா<br>• இவர் என்ரை அம்மா<br>• என்ரை அப்பாவின்ரை பேர்<br>• என்ரை அம்மாவின்ரை பேர்<br><br>• சொற்கள்<br>நண்பன் நண்பி | • நண்பரின் பெயரையும் ஊரையும் கூறுவர்.<br>• வீட்டில் உள்ளவர்களின் உறவுப் பெயர்களைக் கூறுவர்.<br>• அவர், இவர் போன்ற சுட்டுப் பெயர்களைப் பயன்படுத்தி அவர்களை அறிமுகப்படுத்துவர். | உரையாடல் | 04 | 04 | - |

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | கற்றல்பேறு | கற்றல் கற்பித்தல் முறை | காலம் (மணி) | பேச்சு | எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|
| | | அம்மா அப்பா<br>அக்கா அண்ணா<br>தம்பி தங்கச்சி<br>மாமா மாமி | • இவர், இவரின்ரை, அவர், அவரின்ரை போன்ற சொற்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவர். | | | | |
| 03. | 3.1<br>தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களை இனங்கண்டு முறையாக எழுதுவர்/ வாசிப்பர்<br><br>3.2<br>வடமொழி எழுத்துக்களை இனங்கண்டு வாசிப்பர். எழுதுவர்.<br><br>3.3<br>அன்றாடம் பயன்படுத்தும் சொற்களை கூறுவர். வாசிப்பர். | • இலகுவாக எழுதக் கூடிய மெய் எழுத்துக்கள்<br>• உயிர் எழுத்துக்கள்<br>• உயிர்மெய் எழுத்துக்கள்<br>• படங்களுடன் சில சொற்கள்<br><br>ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ<br><br>• காய்கறிகள்<br>• கிழமை நாட்கள்<br>• பழங்கள்<br>• உணவு வகைகள்<br>• பதவிப் பெயர்கள் | • உயிர் எழுத்துக்களை இனங்கண்டு உச்சரிப்பர். எழுதுவர்.<br>• மெய் எழுத்துக்களையும் உயிர்மெய் எழுத்துக்களையும் இனங்கண்டு உச்சரிப்பர். எழுதுவர்.<br>• சிறு சிறு சொற்களை எழுத வாசிக்கப் பழகுவர்.<br><br>• வடமொழி எழுத்துக்களுடனான சொற்களை வாசிப்பர். எழுதுவர்.<br><br>• அன்றாடம் பயன்படுத்தப்படும் சொற்களை அட்டவணைப்படுத்திக் கூறுவர்/ வாசிப்பர். எழுதுவர். | விரிவுரை<br>கலந்துரையாடல்<br>குழுச் செயற்பாடு | 10 | 06 | 04 |

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | கற்றல்பேறு | கற்றல் கற்பித்தல் முறை | காலம் (மணி) | பேச்சு | எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|
| 04. | 4.1<br>கட்டளைக்கு ஏற்ப செயற்படுவர்.<br><br>4.2<br>மரியாதைச் சொற்களைப் பயன்படுத்தி பண்புடன் உரையாடுவர் | • எழும்புங்கோ / எழும்புங்க<br>• இருங்கோ / இருங்க<br>• பாடுங்கோ / பாடுங்க<br>• வாசியுங்கோ / வாசியுங்க<br>• வையுங்கோ / வையுங்க<br>• வாங்கோ / வாங்க<br>• போங்கோ / போங்க<br>• திறவுங்கோ / திறவுங்க<br>• பாருங்கோ / பாருங்க | • கட்டளைகளை செவிமடுப்பர்.<br><br>• கட்டளைகளை செய்து காட்டுவர். | விரிவுரை<br>கலந்துரையாடல்<br>செய்து காட்டல்<br>பின்பற்றல் | 04 | 04 | - |
| 05. | 5.1<br>வினையடிகளை குறைவினைகளாக மாற்றி தேவைக்கேற்ப உரையாடுவர் | • குடி - குடிக்க<br>• திற - திறக்க<br>• கதை - கதைக்க<br>• பார் - பாக்க<br>• வா - வர<br>• போ - போக<br>• கொண்டா - கொண்டர<br>• சொல்லு - சொல்ல | • குறைவினைகளைப் பயன்படுத்தி சந்தர்ப்பத்திற்கேற்ப உரையாடுவர் | கலந்துரையாடல் | 04 | 03 | 01 |
| 06. | 6.1<br>வாழ்த்துக்களைக் கூறுவர். | • இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.<br>• இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்.<br>• இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.<br>• இனிய நத்தார் வாழ்த்துக்கள்.<br>• இனிய றமழான் வாழ்த்துக்கள். | • ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வர் | சோடிகளாக இணைந்த செயற்பாடு | 02 | 02 | - |

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | கற்றல்பேறு | கற்றல் கற்பித்தல் முறை | காலம் (மணி) | பேச்சு | எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|
| 07. | 7.1<br>சந்தர்ப்பத்திற்கேற்ப கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக வினவுவர் | • என்ன?<br>• எங்கை?<br>• எத்தினை?<br>• எவ்வளவு?<br>• எப்பிடி?<br>• ஏன்?<br>• ஆர்?<br>• புத்தகம் - புத்தகமா?<br>• இருக்கு - இருக்கா?<br>• சரி - சரியா? | • வினாச் சொற்களை அறிந்து கொள்வர்.<br>• பெயர், வினைச் சொற்களை வினாச் சொற்களாக மாற்றுவர்<br>• அவற்றை உரிய இடத்தில் பயன்படுத்துவர் | கலந்துரையாடல் சோடிகளாக இணைந்த செயற்பாடு | 04 | 02 | 02 |
| 08. | 8.1<br>உடன்பாடு, எதிர்மறை வாக்கியங்களைப் பயன்படுத்தி சிறு உரையாடலில் ஈடுபடுவர். | • இருக்கு - இல்லை<br>• வேணும் - வேண்டாம்<br>• தெரியும் - தெரியாது<br>• போதும் - போதாது<br>• விருப்பம் - விருப்பம் இல்லை<br>• முடியும் - முடியாது | • உடன்பாடு எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்தி சந்தர்ப்பத்திற்கேற்ப உரையாடுவர். | கலந்துரையாடல் சோடிகளாக இணைந்த செயற்பாடு | 02 | 02 | - |
| 09. | 9.1<br>அன்றாட செயற்பாடுகளுக்காக இலக்கங்களைப் பயன்படுத்துவர்.<br><br>9.2<br>அன்றாட தேவைக்கேற்ப நேரத்தைக் கூறுவர் | • பேச்சுத் தமிழில் 1 முதல் 100 வரை உள்ள இலக்கங்கள்<br><br>• பேச்சுத் தமிழில் நேரம் | • 1 முதல் 100 வரை உள்ள இலக்கங்களைக் கூறுவர்.<br><br>• உரிய நேரத்தை சரியாகக் கூறுவர் | தனிநபர் செயற்பாடு விரிவுரை | 04 | 04 | - |

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | கற்றல்பேறு | கற்றல் கற்பித்தல் முறை | காலம் (மணி) | பேச்சு | எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|
| 10. | 10.1<br>பெயர்ச் சொற்களுடன் உருபுகளைச் சேர்த்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருள் வேறுபட உரையாடுவர் | • இன்ரை, ன்ரை<br>• ஐ<br>• இலை<br>• ஓடை<br>• க்கு, உக்கு<br>• ஆலை<br>• இட்டை, ட்டை | • பேச்சுத் தமிழில் உரிய முறையில் உரையாடுவர் | விரிவுரை<br>குழுச் செயற்பாடு<br>கலந்துரையாடல் | 04 | 03 | 01 |
| 11. | 11.1<br>ஒருமை சொற்களை பன்மைச் சொற்களாக மாற்றுவர். | • ஒருமை பன்மை<br>• குடை குடைகள்<br>• பேனை பேனைகள்<br>• மேசை மேசைகள்<br>• போத்தல் போத்தல்கள் | • அன்றாடம் பயன்படும் சொற்களை அட்டவணைப்படுத்திக் கூறுவர்/ வாசிப்பர். எழுதுவர். | விரிவுரை<br>குழுச் செயற்பாடு<br>கலந்துரையாடல் | 02 | 02 | - |
| 12 | 12.1<br>எதிர்கால, இறந்தகால, நிகழ்கால வினைச்சொற்களை சந்தர்ப்பத்திற்கேற்ப சரியான முறையில் பயன்படுத்துவர் | • எதிர்காலம்<br>நான் வரு வ்+என்- வருவென்<br>நான் ஓடு வ்+என்- ஓடுவென்<br><br>• நிகழ்காலம்<br>படிக்க்+இற்+என்<br>படிக்கிறென்<br><br>• இறந்தகாலம்<br>படி ச்ச்+என்<br>நான் படிச்சென் | • காலத்தை அறிந்து சந்தர்ப்பத்திற்கேற்ப உரையாடுவர் | விரிவுரை<br>குழுச் செயற்பாடு<br>கலந்துரையாடல் | 06 | 04 | 02 |

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | கற்றல்பேறு | கற்றல் கற்பித்தல் முறை | காலம் (மணி) | பேச்சு | எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | 13.1<br>அன்றாட தேவைகளுக்காக பொது இடங்களில் உரையாடுவர். | • சந்தை<br>உதாரணம்-<br>கோவா ஒரு கிலோ எவ்வளவு?<br>• பஸ் தரிப்பிடம்<br>உதாரணம் -<br>பதுளை பஸ் எத்தனை மணிக்கு இருக்கு. | • பொது இடங்களில் தமது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுவர். | குழுச் செயற்பாடு<br>கலந்துரையாடல் | 02 | 02 | - |